2006 ஆகஸ்ட் 23]

வேண்டியுள்ளது. இதனால் பொதுமக்களுக்கு நேரமும், பணமும் விரயமாகிறது. எனவே, ஒரு இலட்சத்திற்கும் மேலான மக்கள் வசிக்கிற இடத்தில், திருப்போரூரை மையமாகக் கொண்டு, வட்டாட்சியர் அலுவலகம் அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி, எல்லை வரையறை ஆணையத்தினுடைய தடை நீக்கப்பட்டவுடனே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை எல்லாம் அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 75. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**75—**

## குளம் சீரமைத்தல்

***434—திரு. பி. பலராமன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, பொன்னேரி பேரூராட்சியிலுள்ள அருள்மிகு ஹரிகிருஷ்ண பெருமாள் திருக்கோயில் குளத்தைச் சீரமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி சிறப்பு ஊராட்சித் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ், மதிப்பீட்டுத் தொகை ரூ.25.50 இலட்சத்தில் அருள்மிகு ஹரிகிருஷ்ண பெருமாள் திருக்கோயில் குளத்தினைச் சீரமைக்க, மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. அனுமதி கிடைத்தவுடன், குளத்தினைச் சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9–55

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைக்காலம் நெருங்குகிறது. கடந்த காலத்தில் புரட்சித் தலைவி

[2006 ஆகஸ்ட் 23

அம்மா அவர்கள் கொண்டுவந்த மழைநீர் சேகரிப்புத் திட்டத்தால் பல திருக்கோயில்களின் திருக்குளங்கள் நிரம்பி வழிந்தன. அந்த நடைமுறைகளை நீங்களும் பின்பற்றி, திருக்கோயில்களின் திருக்குளங்களுக்கு மழைநீர் கொண்டு வர, மழைநீர் சேகரிப்புத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவீர்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அவர்களுடைய அம்மா ஆட்சிக் காலத்திலேதான் அதற்கான பணி துவங்கப்பட்டது. அதுவும் பொன்னேரி சிறப்பு ஊராட்சிமூலமாக, பொதுமக்கள் 25 சதவீதப் பங்களிப்புடன் தன்னிறைவுத் திட்டத்தில், இப்பணி தொடங்க முடிவு செய்யப்பட்டது. ஆனால், பொதுமக்கள் அந்த 25 சதவீதப் பங்கினை இன்னும் செலுத்தாத காரணத்தால், இத்திட்டம் இன்னும் நிலுவையில் இருக்கிறது; விரைவுபடுத்தப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி, சென்னிமலை முருகன் கோவிலில் வேங்கைமரத் தேர் நிகழ்ச்சி, வாரத்தில் ஒரு முறை ஏழு மணிக்கு இயக்கப்படுகிறது. இரவு ஏழு மணிக்குப் பிறகு, இரவுக் கால பூஜை, எட்டு மணிக்கு இருக்கிறது. அந்தத் தேர் இயக்கப்படுகிற நேரம் ஐந்து நிமிடங்கள். ஐந்து நிமிடங்கள் முடிந்தபிறகு, ஒரு மணி நேரம் பக்தர்கள் பூஜைக்காகக் காத்திருக்க வேண்டியிருக்கிறது. எனவே, 7.30 மணிக்கு மாற்றியமைக்க வேண்டுமென்கிற கோரிக்கையை அமைச்சரிடத்திலும் கொடுத்திருந்தோம். அதுகுறித்து அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர், குளத்தைப் பராமரிப்பது சம்பந்தமாகத்தான் மூலக் கேள்வி.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இந்து சமய அறநிலையத் துறை என்கின்ற காரணத்தினாலேயே, கோயில் சம்பந்தமான கோரிக்கை வந்த காரணத்தினாலே...

2006 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் சேகர் அவர்கள், ஏற்கெனவே கடந்த வாரத்தில் இதைக் கோரிக்கைமூலமாகவும் கொடுத்திருக்கிறார்கள்; பரிசீலிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது; வெகுவிரைவில் வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறையின் சார்பாகக் கொண்டுவரப்பட்ட சட்ட முன்வடிவை நிறைவேற்றுகின்றபோது, அனைவரும் அர்ச்சகராகலாம் என்ற ஒரு ஷரத்து, சட்டமுன்வடிவிலேயிருந்து நீக்கப்பட்டதாகவும், அதனால் அந்தச் சட்டத்திற்கே முடக்கம் ஏற்பட்டதாகவும், சில பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது. அதைப்பற்றிய ஒரு impression—கருத்துகூட—மக்களிடையே அந்தச் சட்டம் நிறைவேற்றப்படுமா என்ற ஐயப்பாடு எழுந்துள்ளது. இதுகுறித்து அறநிலையத் துறை அமைச்சர் விளக்குவாரா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏற்கெனவே அவையில் வைக்கப்பட்ட நிகழ்வு. அதுபற்றி விவரங்கள் வேண்டுமானால், உறுப்பினர் தனிக் கேள்வி எழுப்பினால், முறையாக பதில் அளிக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**76—**

## நூலகம்

***1529—திரு. து. அமரமூர்த்தி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—